

## பேராசிரியர் செல்லத்துரை பாலச்சந்திரன் BA(Hons), M. Sc (முன்னாள் கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

வேலணை மேற்கு திரு செல்லத்துரை திருமதி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனாக 11.09.1942 இல் அவதரித்த திரு செ. பாலச்சந்திரன் அவர்கள் 1969 இல் தனது துணைவியாராக சத்தியலட்சுமியை மணம்புரிந்தார். இருவரது இல்லறத்தில் ரோகினி, சுபாசினி, நளாயினி ஆகிய பெண் குழந்தைகளையும் பாலமுரளி, ராஜமுரளி ஆகிய ஆண் குழந்தைகளையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தார். 20.10.2001 அன்று தனது 59வது வயதில் பூவுலக வாழ்வை நிறைவு செய்து விண்ணுலக வாழ்வை ஏற்றுக்கொண்டார். இவரது பாரம்பரியம் சமயபக்தி மிக்க உயர்பண்புகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. இவரது தந்தையின் குணாம்சமான அன்பு, அறம், விருந்தோம்பும் பண்பு, எதிலும் நிறைவு காணும் தன்மை ஆகிய நற்குணங்களை அச்சொட்டாகக் கொண்டிருந்தார். வேலணை நடராசா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியையும் **வேலணை மத்திய கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்ற இவர் 1963 இல் இக்கல்லூரியில் இருந்து பேராதனைப் பல்கலைக்கழகம் புகுந்த முதல் மாணவன் என்ற பெருமையையும் தேடிக்கொண்டார்.** 1967ல் புவியியல் சிறப்புக் கலைமாணிப் பரீட்சையில் 2ம் வகுப்பு மேல் பிரிவில் சித்தி பெற்றார். அடுத்த ஆண்டே கொழும்புப் பல்கலைக்கழகத்தில் துணை விரிவுரையாளராகப் பதவி பெற்றார். 1973ல் பிரித்தானிய கடல்கடந்த மாணவர் புலமைப் பரிசில் பெற்று பேமிங்காம் பல்கலைக்கழகத்தில் பிரயோகக் காலநிலையியல் துறையில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தை 1975ல் பெற்றுக்கொண்டார். 1975ல் விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்ற இவர் 1978 மே மாதம் யாழ் பல்க்கழகத்திற்கு மாற்றலாகி வருகை தந்தார். 1982ல் சிரேஸ்ட விரிவுரையாளராக பதவி உயர்வு பெற்ற இவர் 1992ல் இணைப் பேராசிரியரானார். 1992 முதல் 1997 வரை புவியியல்துறைத் தலைவராகக் கடமை ஆற்றினார். 1999 முதல் இறக்கும் வரை கலைப்பீடாதிபதியாக இருந்த காலத்தில் சிறிது காலம் பதில் துணைவேந்தராகவும் கடமையாற்றியுள்ளார். 1997 முதல் 1999 வரையான இரண்டாண்டு காலம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புவியியல் அதிதிப் பேராசிரியராகவும் கடமையாற்றினார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையை ஒழுங்குபடுத்துவதிலும் புவியியல் கற்கை நெறிக்குரிய பாடவிதானங்களைத் தயாரிப்பதிலும் இவரது பங்களிப்பை அப்பல்கலைக்கழகம் பெரிதும் பாராட்டியுள்ளது.

பல்கலைக்கழக கல்விசார் சேவைகளுக்கு மேலதிகமாகவும் இவர் பல பணிகள் ஆற்றியுள்ளார். முக்கியமாக யாழ் பல்கலைக்கழக மாணவ ஆலோசகராக 1988-1997 வரையும் கடமையாற்றியுள்ளார். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவராக 1986-1988 வரை பணிபுரிந்த இவர் கலைப்பீடத்தின் ஆங்கில ஆய்வுச் சஞ்சிகையான "The Sri Lankan Journal of South Asian Studies" இன் ஆசிரியராகப் பணியாற்றினார். கலைப்பீட "சிந்தனை" ஏட்டின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றியுள்ளார். வேலணை பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக மலரினை 1990ல் வெளிக்கொணர்ந்தார். தீவுப்பகுதி அபிவிருத்திக் கழகத்தினை உருவாக்கி அப்பிரதேச அபிவிருத்திக்கு முன்னின்று உழைத்தவர். தனது மதிப்புக்குரிய பேராசிரியர் செல்வநாயகத்துடன் இணைந்து 1979ல் தென்மராட்சிப் பகுதிகளின் கிராம பொருளாதார அளவீட்டினை மேற்கொண்டார். அத்துடன் பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுச்சபையின் செயலாளராகவும் கடமையாற்றினார்.

புவியியல் தொடர்பான பல ஆய்வுக் கட்டுரைகளை உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் வெளியிட்டார். பிரயோக காலநிலை என்பது இவரது சிறப்பான ஆய்வுப் புலமாக அமைந்தது. பிரயோகக் காலநிலையியல் இலங்கையின் பௌதீகப் புவியியல் ஆகிய இரு நூல்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டன. பல்வேறு கருத்தரங்குகளிலும் நினைவுச் சொற்பொழிவுகளிலும் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார். யாழ்ப்பாணக் காலநிலை வரட்சியின் பரம்பல், சூறாவளியின் தாக்கம்,

நீர்வளம், வடகிழக்குப் பிரதேசங்களின் வளங்கள் போன்ற தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றன. தமிழ் மொழிமூல கற்பித்தலை வலியுறுத்தி வந்த இவர் தமிழில் புவியியல் தொடர்பான பல்வகை ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார். முக்கியமாக பழைய தமிழ் இலக்கிய செய்திகளுடன் இணைந்து சில ஆய்வுகள் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. சங்க காலத்தில் நிகழ்ந்த சூறாவளி பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டார். **கடும் சுகவீனமுற்று யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையிலும் கூட பட்டமளிப்பு விழா தொடர்பான நினைவுப்பேருரையை எழுதி வழங்கியமை அவர் இறக்கும்வரை கல்விச் சிந்தனையுடன் இருந்தமையை புலப்படுத்துவதாகும்.** அக்கட்டுரை தமிழ் இலக்கியங்கள் காட்டும் தென் தமிழ்நாடு பற்றிய புவியியல் விளக்கமாக அமைந்திருந்தமை அவரது தமிழ்ப்பற்றைப் புலப்படுத்தி நிற்கின்றது. புவியியலில் தனக்கென தனி முத்திரை பதித்த பேராசிரியர் ஆயிரக் கணக்கான பட்டதாரிகளை உருவாக்கிய பெருமைக்குரியவர். அகிலம் முழுவதும் பரந்துள்ள அவரது மாணவர்கள் ஊடாக பேராசிரியரின் புகழ் வாழ்வு நிலைத்து நிற்கும்.

**பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்**
தலைவர் புவியியற்றுறை
யாழ் பல்கலைக்கழகம்
19-11-2001